போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

I-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்.

SUPPLEMENT TO PART I OF THE FORT ST. GEORGE GAZETTE.

AUGUST 28, 1928.

ந. 34.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1928-ம் ௵ ஆகஸ்டு ௴ 28௳. [PRICE, 2 *annas*

கவர்ன்மென்ட் விளம்பரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு.

Tamil Translation of Notifications by Government.

லா (ஜெனரல்) டிபார்ட்மென்ட்.

விளம்பரம்.

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ், 1928-ம் ௵
ஆகஸ்ட் ௴ 8௳.

நூ. 628.—மலையாளம் ஜில்லாவில் 1920-ம் ௵த்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு லோகல் போர்டின் அல்லது 1920-ம் ௵த்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு மியுனிஸிபாலிடியின் அதிகாரவரம்புக்குள் இராத கவர்ன்மென்ட் பாட்டைகளில் இன்ன திட்டங்களுக்கு உட்பட்டும் இன்ன கட்டணங்களைச் செலுத்துவதன்மேலும் மோடார் வண்டிகளை வாடகைக்கு விடலாம் அல்லது ஓட்டலாமென்று நிர்ணயித்து, (1914-ம் ௵த்து 8-வது ஆக்டாகிய) 1914-ம் ௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் அடியிற்கண்ட விதிகளைக் களிகூர்ந்து வெளிவிடுகிறார்கள் :—

வாடகைக்கு விடப்படும் அல்லது ஓட்டப்படும் மோடார் வண்டிகளுக்கு லைஸென்ஸ் கொடுப்பது சம்பந்தமாய் 1914-ம் ௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவின்படி வெளிவிடப்பட்ட விதிகள்.

1. சம்பந்தப்பட்ட எக்ஸிக்யுடிவ் என்ஜினீரிடமிருந்து பெற்ற லைஸென்ஸின்மேலன்றி மற்றப்படி, மலையாளம் ஜில்லாவில் 1920-ம் ௵த்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு லோகல் போர்டின் அல்லது 1920-ம் ௵த்திய சென்னபட்டணத்து டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு மியுனிஸிபாலிடியின் அதிகாரவரம்புக்கு வெளியே யிருக்கும் கவர்ன்மென்ட் பாட்டைகளில் எந்த மோடார் வண்டியையும் வாடகைக்கு விடவுங்கூடாது ஓட்டவுங்கூடாது.

2. (a) (i) மோடார் வண்டியானது 1914-ம் ௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவின்படி வெளிவிடப்பட்ட சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக் குறித்த விதிகளின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டு, அந்தப்படி ரெஜிஸ்டர்செய்திருப்பது எந்தக் கால அளவுக்கு லைஸென்ஸுக்காக விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறதோ அந்தக் கால அளவில் செலாவணியாய்க்கொண்டிருந்தாலன்றி மற்றப்படியும்,

(ii) நிஷ்கரிஷை செய்யப்பட்ட வீதப்படி லைஸென்ஸ் கட்டணமும் செலுத்தப்பட்டிருந்தாலன்றி மற்றப்படியும்

லைஸென்ஸ் கொடுக்கப்படமாட்டாது.

(b) ஏககாலத்தில் ஒரு வருஷத்துக்கு மேற்பட்ட கால அளவுக்கு லைஸென்ஸ் கொடுக்கப்படமாட்டாது. இதனுடன் சேர்த்திருக்கும் நமூனாப்படி லைஸென்ஸுகள் கொடுக்கப்படும். மேலும், அவை-கொடுக்கப்பட்ட தேதிக்கு அடுத்து வரும் ஸெப்டெம்பர் ௴ 30௳ யன்

றைக்காவது மார்ச்மீ 31உ யன்றைக்காவது முடிவாய்விடும்.

3. வாடகைக்கு விடப்படும் அல்லது ஓட்டப்படும் மோடார் வண்டிகளில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளிடமிருந்து அடியிற்கண்ட வீதங்களுக்கு அதிகமாய்க் கட்டணங்கள் வாங்கக்கூடாது :—

முதல் வகுப்பு ...	ஒரு மைலுக்காவது அதன் பாகத்துக்காவது ஒவ்வொரு பிரயாணிக்கும் 2 அணா.
இரண்டாம் வகுப்பு.	ஒரு மைலுக்காவது அதன் பாகத்துக்காவது ஒவ்வொரு பிரயாணிக்கும் 1 அணா 6 தம்பிடி.
வாடகைக்கு விடும் டூரிங் கார் என்னும் பிரயாணம் செய்யும் வண்டிகள்.	வண்டி முழுவதுக்கும் ஒரு மைலுக்காவது அதன் பாகத்துக்காவது உட்காரும் இடம் ஒன்றுக்கு 2 அணா 6 தம்பிடி.

குறிப்பு.—டூரிங் கார் என்னும் வண்டியின் விஷயத்தில் ஷை கட்டணம் வண்டி முழுவதுக்கும் வாங்கப்படுமேயொழிய, வாஸ்தவத்தில் ஏற்றிக்கொண்டு போகும் பிரயாணிகளின் சங்கியையை அனுசரித்து வாங்கப்படுவதில்லை.

4. மூன்று வயதுக்கு மேற்பட்டும் பன்னிரண்டு வயதுக்கு உட்பட்டுமுள்ள சிறுவர்களுக்கு 3-வது விதியில் கண்டிருக்கும் வீதங்களில் பாதிக்கு மேற்படாத வீதங்களின்படி கட்டணம் வாங்கப்படும். மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குக் கட்டணம் வாங்கப்படமாட்டாது.

5. கீழே குறிப்பிட்டிருக்கும் எடை அளவுக்குப் பயணச்சாமான்களைக் கட்டணம் செலுத்தாமலே தம்முடன் கொண்டுபோக ஒவ்வொரு பிரயாணிக்கும் அனுமதி கொடுக்கவேண்டும் :—

	பயணச்சாமான் எடை.
முதல் வகுப்புப் பிரயாணி.	15 பவுண்ட்.
இரண்டாம் வகுப்புப் பிரயாணி.	10 ,,

6. எவ்வளவு வரையில் கட்டணமில்லாமல் பயணச்சாமானைக் கொண்டுபோகலாமோ அதற்கு அதிகமாய்க் கொண்டுபோகும்பட்சத்தில், அதற்காக பத்து மைலுக்காவது அதன் யாதொரு பாகத்துக்காவது ஒவ்வொரு பத்து பவுண்ட் அல்லது அதற்குக் குறைந்த எடைக்கும் ஒரு அணாவுக்கு மேற்பட்டுக் கட்டணம் வாங்கக்கூடாது.

7. பயணச்சாமான் தவிர வாடகைக்கு விடப்படும் அல்லது ஓட்டப்படும் மோடார் வண்டிகளில் கொண்டுபோகும் இதர சாமான்களுக்குப் பத்து மைலுக்காவது அதன் யாதொரு பாகத்துக்காவது ஒவ்வொரு பத்து பவுண்ட் அல்லது அதற்குக் குறைந்த எடைக்கும் ஆறு தம்பிடிக்கு மேற்பட்டுக் கட்டணம் வாங்கக்கூடாது.

8. எந்த மோடார் வண்டிக்காக லைஸென்ஸ் பெற்று அது செலாவணியாய்க்கொண்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு மோடார் வண்டியானது வாடகைக்குப் பிரயாணிகளை ஏற்றிக்கொள்வதற்காக நின்றுகொண்டிருந்தாலும் அல்லது வாடகைக்கு ஓடிக்கொண்டிருந்தாலும், அந்த வண்டியை ஓட்டுகிறவராகிலும் அதன் கண்டக்டராகிலும்-கட்டணம் கொடுக்க வரும் யாதொரு நபரிடமிருந்து அதை வாங்கிக்கொள்ள மறுப்பதற்கு நியாயமான காரணம் இருந்தாலொழிய அந்தப்படி மறுக்கக்கூடாது. ஆனால், அந்த வண்டியில் மொத்தத்தில் எத்தனை பிரயாணிகளை ஏற்றிக்கொண்டுபோக அனுமதி கொடுத்திருக்கிறதோ அத்தனை பேரையும் ஏற்றியானதும் டிக்கெட்டுகள் கொடுப்பதைக் கண்டக்டர் நிறுத்திவிடவேண்டும்.

9. மோடார் வண்டி போய்க்கொண்டிருக்கும்போதெல்லாம் அதை ஓட்டுகிறவர் லைஸென்ஸைத் தம்முடன் கொண்டுபோகவேண்டும்.

10. இந்த விதிகளில் கண்ட நிர்ப்பந்தங்களிலாவது வரையறைகளிலாவது திட்டங்களிலாவது எதன்படிக்காகிலும் நடவாமல் லைஸென்ஸ்தாரர் தப்பித்துக்கொண்டாலும் அவைகளில் எதையாகிலும் அவர் மீறி நடந்தாலும், தப்பான சங்கதி தெரிவித்தோ மோசடியாகவோ அவர் லைஸென்ஸ பெற்றிருந்தாலும், எக்ஸிக்யுடிவ் என்ஜினீரானவர் - எப்போதாயினும் லைஸென்ஸைச் சிறிது காலம் செலாவணியாகவொட்டாமல் நிறுத்திவைக்கலாம் அல்லது அதை ரத்து செய்துவிடலாம். லைஸென்ஸைச் சிறிதுகாலம் செலாவணியாகவொட்டாமல் நிறுத்திவைத்தோ அல்லது ரத்துசெய்தோ எக்ஸிக்யுடிவ் என்ஜினீர் பிறப்பித்த யாதொரு உத்தரவின்மேல் சம்பந்தப்பட்ட ஸூபரின்டெண்டிங் என்ஜினீரிடம் அப்பீல் செய்துகொள்ளலாகும். யாதொரு லைஸென்ஸ் சிறிதுகாலம் செலாவணியாகவொட்டாமல் நிறுத்திவைக்கப்பட்டிருந்தாலும் ரத்துசெய்யப்பட்டிருந்தாலும், அதை வைத்திருப்பவர் - அதைக் கொடுத்த உத்தியோகஸ்தரிடம் அதை உடனே வாபஸ் செய்துவிடவேண்டும்.

11. எக்ஸிக்யுடிவ் என்ஜினீராவது, அஸிஸ்டன்ட் என்ஜினீராவது, ஓவர்ஸியரின் அந்தஸ்துக்கு மேற்பட்ட அந்தஸ்துள்ள பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மென்டைச் சேர்ந்த யாதொரு உத்தியோகஸ்தராவது, இதுவிஷயமாய் எக்ஸிக்யுடிவ் என்ஜினீரால் பிரத்தியேகமாக அதிகாரம் கொடுக்கப்பெற்ற அதே இலாகாவைச் சேர்ந்த யாதொரு ஓவர்ஸியராவது மோடார் வண்டியை எல்லாக் காலங்களிலும் பார்வையிடுவது சாத்தியமாயிருக்கவேண்டும்.

12. கல்வெர்ட்டுகளுக்காவது (சிறு பாலங்களுக்காவது) வாராவதிகளுக்காவது பாட்டைகளைச் சேர்ந்த வேறே யாதொரு சொத்துக்காவது மோடார் வண்டி ஓடுவதனால் சாதாரணமாய் ஏற்படும் நஷ்டத்தைத் தவிர வேண்டுமென்றாகிலும் அஜாக்கிரதையாகவாகிலும் உண்டாக்கப்படும் எவ்வித சேதத்துக்கும் லைஸென்ஸ்தாரர் உத்தரவாதியாவார். அப்படிப்பட்ட சேதத்தைச் சரிப்படுத்துவதற்குப் பிடிக்கும் தொகையைச் செலுத்தும்படி கேட்

பதன்மேல் சேதம் உண்டாக்கப்பட்ட சொத்தின் விசாரணை வகிக்கும் எக்ஸிக்யுடிவ் என்ஜினீரிடம் அது செலுத்தப்படாவிட்டால், தொகை செலுத்தும்படி கேட்பது நியாயமென்று ஸூபரின்டெண்டிங் என்ஜினீர் தெரிந்து திருப்தியடைவதன்மேல், அவர் - கேட்கப்படும் தொகையாவது தமக்கு நியாயமாகத் தோற்றும் தொகையாவது செலுத்தப்படுகிறவரையில் லைஸென்ஸைச் செலாவணியாகவொட்டாமல் நிறுத்திவைக்கலாம்.

13. பூர்த்தியாய்ப் பளுவு ஏற்றியிருக்கும்போது மோடார் வண்டியின் பாரம் $3\frac{1}{2}$ டன்னுக்கு மேற்படக்கூடாது.

14. மோடார் வண்டியில் ஏற்றிக்கொண்டு போகப்படும் பிரயாணிகளின் சங்கியையானது லைஸென்ஸில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் அளவுக்கு மேற்படக்கூடாது.

15. லைஸென்ஸை வேறே யாதொரு நபருக்கு ட்ரான்ஸ்பர் செய்வதாயிருந்தால், எக்ஸிக்யுடிவ் என்ஜினீரின் அனுமதி அதன்மேல் கிரமமாய் எண்டார்ஸ் செய்யப்படாமல் அதை அந்தப்படி ட்ரான்ஸ்பர் செய்யக்கூடாது.

16. இந்த விதிகளின்படி லைஸென்ஸ் கொடுப்பதனுல், லைஸென்ஸ் செலாவணியாய்க் கொண்டிருக்கும்போது மராமத்துகள் செய்வதற்காகவாவது இதர காரியங்களுக்காகவாவது மோடார் வண்டிகளின் போக்குவரவு இராதபடி எந்த பாட்டைகளையும் வாராவதிகளையும் மூடிவிடும்படி கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு அதிகாரி உத்தரவு செய்யக்கூடுமோ அந்த பாட்டைகளின்மேலும் வாராவதிகளின்மேலும் மோடார் வண்டியை உபயோகிக்கவொட்டாமல் தடுத்திருப்பதற்காகப் பிரதிபலன் கேட்க லைஸென்ஸ்தாரருக்குப் பாத்தியதை ஏற்படமாட்டாது.

17. அடியிற்கண்ட வீதங்களின்படி லைஸென்ஸ் கட்டணம் விதித்து வாங்கப்படும் :—

வண்டியின் வகுப்பு.	லைஸென்ஸ் கட்டண வீதம்.
1. லாரிகளல்லாத இதர மோடார் வண்டிகள்.	
(a) (ந்யுமாடிக்) காற்று உள்ளே அடைக்கப்பட்டிருக்கும் கட்டுகள் எல்லாச் சக்கரங்களுக்கும் போட்டிருந்தால்.	உட்காரும் இடம் ஒன்றுக்கு அரை வருஷத்துக்கு 15 ரூபாய், அல்லது உட்காரும் இடம் ஒன்றுக்கு ஒரு வருஷத்துக்கு 25 ரூபாய்.
(b) அந்தப்படி போட்டிராவிட்டால்.	உட்காரும் இடம் ஒன்றுக்கு அரை வருஷத்துக்கு ரூ. 22-8-6, அல்லது உட்காரும் இடம் ஒன்றுக்கு ஒரு வருஷத்துக்கு ரூ. 37-8-0.

2. (i) $1\frac{1}{2}$ டன் பாரமுள்ள அல்லது அதற்குக் குறைந்த பாரமுள்ள மோடார் லாரிகள் அல்லது ட்ரெய்லர்கள் (பின்னே சேர்க்கப்படும் வண்டிகள்).

(a) காற்று உள்ளே அடைக்கப்பட்டிருக்கும் கட்டுகன் போட்டிருந்தால்.	அரை வருஷத்துக்கு 100 ரூபாய், அல்லது ஒரு வருஷத்துக்கு 175 ரூபாய்.
(b) அந்தப்படி போட்டிராவிட்டால்.	அரை வருஷத்துக்கு 150 ரூபாய், அல்லது ஒரு வருஷத்துக்கு ரூ. 262 8 0.

(ii) $1\frac{1}{2}$ டன் பாரத்துக்கு மேற்பட்டு $3\frac{1}{2}$ டன்னே அல்லது அதற்குக் குறைந்த பாரமோவுள்ள மோடார் லாரிகள் அல்லது ட்ரெய்லர்கள்.

(a) காற்று உள்ளே அடைக்கப்பட்டிருக்கும் கட்டுகள் போட்டிருந்தால்.	அரை வருஷத்துக்கு 200 ரூபாய், அல்லது ஒரு வருஷத்துக்கு 350 ரூபாய்.
(b) அந்தப்படி போட்டிராவிட்டால்.	அரை வருஷத்துக்கு 300 ரூபாய் அல்லது ஒரு வருஷத்துக்கு 525 ரூபாய்.

யாதொரு மோடார் வண்டி அல்லது ட்ரெய்லரின் விஷயத்தில் லைஸென்ஸ் கட்டணம் செலுத்தியிருப்பதனுல், அந்த மோடார் வண்டி அல்லது ட்ரெய்லருக்காக சுங்கமும் ஓடத்துறைக் கட்டணமும் செலுத்துவதனின்றும் நிவாரணை ஏற்படமாட்டாது.

விவரணம்.—இந்த விதியின் காரியத்துக்காக ஒரு வருஷத்தில் ஆறு மாதத்துக்குக் குறைந்த பாகமானது அரை வருஷமாகவும், ஒரு வருஷத்தில் ஆறு மாதத்துக்கு மேற்பட்ட பாகமானது ஒரு வருஷமாகவும் பாவிக்கப்படும்.

18. அசல் லைஸென்ஸ் போக்கடிந்துபோகிற பட்சத்திலே 1 ரூபாய் கட்டணம் செலுத்தி அந்த லைஸென்ஸுக்கு இரண்டாம் பிரதி பெற்றுக்கொள்ள மோடார் வண்டியின் சொந்தக்காரருக்குப் பாத்தியதை உண்டு.

19. லைஸென்ஸில் கண்ட கால அளவில் மோடார் வண்டி வாடகைக்கு விடப்பட்டாலுஞ்சரி விடப்படாவிட்டாலுஞ்சரி வாடகைக்கு ஓட்டப்பட்டாலுஞ்சரி ஓட்டப்படாவிட்டாலுஞ்சரி, லைஸென்ஸுக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் வாபஸ் செய்யப்படமாட்டாது.

அனுபந்தம்.

வாடகைக்கு விடப்படும் அல்லது ஓட்டப்படும் மோடார் வண்டிக்கு லைஸென்ஸ்.

192- -ம் வருஷத்து லைஸென்ஸ் ந. . செலுத்தப்பட்ட லைஸென்ஸ் கட்டணம் ரூ. . . . . . .

. . . . டிவிழன் எக்ஸிக்யுடிவ் என்ஜினீராகிய நான் - . . . . ல் வசிப்பவரும் . . . . ல் தலைமை ஆபிஸ் உடையவருமான . . . . க்குச் சொந்தமாயுள்ள அடியில் விவரிக்கப்பட்டிருக்கும் மோடார் வண்டியை, இதன் கீழே குறிப்பிட்டிருக்கும் கால அளவுக்கு . . . . பாட்டை வழியாய் வாடகைக்கு விடுவதற்கோ அல்லது ஓட்டுவதற்கோ இதன்

பின்புறத்தில் அச்சிட்டிருக்கும் விதிகளுக்குட்பட்டும் 1914-ம்௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்டுக்கும் சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக்குறித்த விதிகளைச் சேர்ந்த 30-வது விதியின்படி டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கொடுத்திருக்கும் அனுமதிச்சீட்டுக்கும் உட்பட்டும் இதனால் லைஸென்ஸ் கொடுக்கிறேன்.

செய்தவர் பெயரும் செய்யப்பட்ட தேதியும்.	மோடார் வண்டியின் மாதிரி.	வண்டியினுடைய தொட்டியின் மாதிரி.	இத்தனை பேர் உட்காரலாமென்பது.	இவ்வளவு பாரம் ஏற்றிக்கொண்டு போகலாமென்பது.	ஹார்ஸ் பவர் (இஞ்சின் குதிரை பலமுள்ளது).	ஸிலிண்டர்களின் சங்கியை.	மோடார் வண்டியின் விவரம்.								இன்ன கால அளவுக்கு அனுமதிச்சீட்டு கொடுக்கப்பட்டிருக்கிறதென்பது.	இன்ன கால அளவுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பது.
							அடியிற் கண்டவைகளின் மேல் பதிந்திருக்கும் நம்பர்.		பளுவு ஏற்றாமலிருக்கும்போது வண்டியின் பாரம்.	பளுவு ஏற்றப்படாமலிருக்கும்போது இரண்டு டன்னுக்கு மேற்பட்ட பாரமுள்ள மோடார் வண்டிகளின் விஷயத்தில், அடியிற் கண்டதை எழுதவும்.		ரெஜிஸ்டர் செய்கைக்குறிக்க ஏற்படுத்தின நம்பரும் தேதியும்.	இன்ன கால அளவுக்கு ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதென்பது.	டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கொடுத்த அனுமதிச்சீட்டின் நம்பரும் தேதியும்.		
							எஞ்ஜின்.	சாஸி என்ற அடிச் சட்டம்.		ஒவ்வொரு இருசுக்கும் பாரம்.	ஒவ்வொரு சக்கரத்தின் குறுக்களவு.					
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)

பூர்த்தியாய்ப் பளுவு ஏற்றியிருக்கும்போது வண்டியின் பாரம் . . . . க்கு மேற்படக்கூடாது.

ஷை வண்டி . . . . ல் ஓட்டப்படுகிறது அல்லது கண்டக்ட் செய்யப்படுகிறது.

எக்ஸிக்யுடிவ் என்ஜினீர் ஆபிஸ்,

192 -ம்௵ மீ௳ உ. எக்ஸிக்யுடிவ் என்ஜினீர்.

புதுப்பிக்கப்பட்ட தேதி.	இன்ன கால அளவுக்குப் புதுப்பிக்கப்பட்டதென்பது.		செலுத்தப்பட்ட கட்டணத் தொகை.	லைஸென்ஸைப் புதுப்பிக்கும் அதிகாரியின் கையெழுத்து.
	முதல்.	வரையில்.		
			ரூ. அ. ப.	

பி. சீதாராமய்யா,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி.

டெவெலப்மென்ட் டிபார்ட்மென்ட்.

விளம்பரம்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1928-ம் ஜூன் 2௨
(971-ம் நெ. கவர்ன்மென்ட் உத்தரவு).

நெ. 183.—1927-ம் ஆகஸ்ட் 23௨ யுள்ள போர்ட் ஸேய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் I-ம் பாகத்தின் 1343 முதல் 1345 வரையிலுள்ள பக்கங்களிலே (இங்க்லிஷில்) பிரசித்தம் செய்யப்பட்டிருக்கும் 1927-ம் ஆகஸ்ட் 17௨ பிறந்த 256-ம் நெ. விளம்பரத்தை ரத்துசெய்து அதற்குப் பர்த்தியாக, (1923-ம்த்து 4-வது ஆக்டாகிய) இந்துதேசத்துச் சுரங்க ஆக்ட் 30-வது பிரிவின்படி வெளிவிடப்பட்டு, 1925-ம் ஜனவரி 6௨யுள்ள போர்ட் ஸேய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் I-ம் பாகத்தின் 35-வது, 36-வது பக்கங்களிலே (இங்க்லிஷில்) பிரசித்தம் செய்யப்பட்டிருக்கும் விதிகளில், ஷை ஆக்ட் 30-வது பிரிவிற்கண்ட (g) குறிப்பிட்ட பகுதியின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு சேர்க்க உத்தேசிக்கும் விதியின் அடியிற்கண்ட மசோதாவானது - அதனல் வெகுசாய்ப் பாதிக்கப்படக்கூடிய சகல நபர்களுக்கும் தெரியும்பொருட்டு ஷை ஆக்ட் 31-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கிறபடி பிரசித்தம் செய்யப்படுகிறது. மேலும், ஷை மசோதா 1928-ம் ஸெப்டெம்பர் 13௨ யன்றைக்காவது அதற்குப் பிறகாவது ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்று இதனல் அறிக்கையிடப்படுகிறது. அந்த மசோதா விஷயமாய்க் குறிப்பிடப்பட்ட தேதிக்குமுன் எந்த நபரிடமிருந்தாகிலும் வந்து சேரக்கூடிய யாதொரு ஆட்சேபனை அல்லது அபிப்பிராயக்குறிப்பைப்பற்றி ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் யோசிப்பார்கள்.

சேர்க்க உத்தேசிக்கும் விதியின் மசோதா.

ஷை விதிகளைச் சேர்ந்த 20-வது விதிக்குப் பிறகு அடியிற்கண்ட விதியை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

"20-A. ஷை ஆக்ட் 33-வது பிரிவின்படி ஒவ்வொரு சுரங்கத்திலுமாவது அதற்குச் சமீபத்திலாவது ஒட்டவேண்டியிருக்கிற ஆக்டின் சங்கிரகமும் அந்த ஆக்டின்படி செய்யப்பட்ட ரெகுலேஷன்கள் - விதிகள் ஆகிய இவைகளின் சங்கிரகமும் இதில் கீழே நிர்ணயிக்கப்பட்டபடி இருக்கவேண்டும். அவை இங்க்லிஷிலும் சுரங்கம் எந்த ஜில்லாவில் இருக்கிறதோ அந்த ஜில்லாவில் வழங்கும் பிரதான சுதேச பாஷைகளிலும் இருக்கவேண்டியதுமல்லாமல், பிரதான இன்ஸ்பெக்டராகிலும் இன்ஸ்பெக்டராகிலும் அவசியமென்று அபிப்பிராயப்படக்கூடிய வேறே யாதொரு சுதேச பாஷையிலுங் கூட இருக்கவேண்டும்."

(1923-ம்த்து 4-வது ஆக்டாகிய) இந்துதேசத்துச் சுரங்க ஆக்ட், 1926-ம்த்திய இந்துதேசத்து உலோகங்கள் கிடைக்கும் சுரங்கங்களைக்குறித்த ரெகுலேஷன்கள், ஷை ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகள் ஆகிய இவைகளின் சங்கிரகம்.

இங்கே (சுரங்கத்தில் அல்லது சுரங்கத்துக்குச் சமீபத்தில்) 33-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி ஒட்டப்பட்டது.

	வேலைசெய்யும் காலஅளவு.			போஜன காலம்.	
	மணியிலிருந்து	மணி வரையில்		மணியிலிருந்து	மணி வரையில்
திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரையிலும் சனிக்கிழமையும்.			காலை. மத்தியானம். பிற்பகல். சனிக்கிழமை.		

மானேஜரின் சொந்தக்காரரின் அல்லது ஏஜென்டின் } கையெழுத்து.

-ம் ௴ ௨.

1923-ம்த்திய இந்துதேசத்துச் சுரங்க ஆக்ட்.

நிர்ணயிக்கப்பட்ட சங்கிரகம்.

இன்ஸ்பெக்டர்கள்.

1. யாதொரு இன்ஸ்பெக்டரானவர் - எந்த சுரங்கத்திலாகிலும் பிரவேசித்துப் பார்வையிடுவதுடன், சுரங்கத்தின் நிலைமையைக் கண்டறிவதற்காகவும் இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளும் ரெகுலேஷன்களிலும் விதிகளிலும் சகாயச் சட்டங்களிலும் கண்ட நிபந்தனைகளும் அனுசரிக்கப்பட்டுவருகின்றனவாவென்று நிச்சயித்தறிவதற்காகவும் அவசியமாயிருக்கக்கூடிய பரிசோதனையும் விசாரணையும் செய்யலாம். [பிரிவு 6.]

2. சுரங்கத்தின் ஒவ்வொரு சொந்தக்காரரும் ஏஜென்டும் மானேஜரும் - இந்த ஆக்டின்படி பிரவேசிக்கவாவது பார்வையிடவாவது ஸர்வே செய்யவாவது அளவெடுக்கவாவது பரிசோதனை பண்ணவாவது விசாரணை செய்யவாவது ஒவ்வொரு இன்ஸ்பெக்டருக்கும் 7-வது பிரிவின்படி அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் ஒவ்வொரு நபருக்கும் நியாயமான சகல சௌகரியங்களும் செய்துகொடுக்கவேண்டும். [பிரிவு 8.]

சுரங்கங்களின் நிர்வாகம்.

3. எந்த சுரங்கத்துக்காகிலும் யோக்கியதைபெற்ற மானேஜர் ஒருவர் இல்லாமல் அந்த சுரங்கத்தில் வேலை நடத்தப்பட்டுவந்தால், சொந்தக்காரர், ஏஜென்ட் ஆகிய ஒவ்வொருவரும் இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளை மீறி நடந்ததாகக் கருதப்படுவார். [பிரிவு 15.]

4. ஒவ்வொரு சுரங்கத்தின் சொந்தக்காரரும் ஏஜென்டும் மானேஜரும் - அந்த சுரங்கத்தின் சம்பந்தமாக நடத்தப்படும் சகல வேலைகளும் இந்த ஆக்டிலும் அதன்படி செய்யப்பட்ட ரெகுலேஷன்கள், விதிகள், சகாயச் சட்டங்கள் ஆகிய இவைகளிலும் எவையேனும் உத்தரவுகளிலும் கண்ட நிபந்தனைகளின்படி நடத்தப்படுவதற்கு உத்தரவாதியாவார்கள். [பிரிவு 16.]

வேலையில் அமர்த்திக்கொள்ளும் மணிநேரங்களும் அது சம்பந்தமான வரையறையும்.

23. யாதொரு நபரை—

(a) எந்த வாரத்திலும் ஆறு தினங்களுக்கு அதிகமாகவும்,

(b) அவர் பூமிக்குமேல் வேலைசெய்கிற பட்சத்திலே, எந்த வாரத்திலும் அறுபது மணி நேரத்துக்கு அதிகமாகவும்,

(c) அவர் பூமிக்குக் கீழ் வேலை செய்கிற பட்சத்திலே, எந்த வாரத்திலும் ஐம்பத்து நாலு மணிநேரத்துக்கு அதிகமாகவும் யாதொரு சுரங்கத்தில் வேலையில் அமர்த்திக் கொள்ளக்கூடாது. [பிரிவு 23.]

6. பதின்மூன்று வயதுக்குக் கீழ்ப்பட்ட எந்த நபரையும் யாதொரு சுரங்கத்தில் வேலையில் அமர்த்திக்கொள்ளவுங்கூடாது, பூமிக்குக் கீழே யிருக்கும் யாதொரு சுரங்கத்தின் எந்த பாகத்திலாகிலும் இருக்கவொட்டவுங்கூடாது. [பிரிவு 26.]

7. ஒவ்வொரு சுரங்கத்துக்காகவும் அந்த சுரங்கத்தில் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் சகல நபர்களைக்குறித்தும் அவர்கள் வேலை செய்யும் மணிநேரங்களைக்குறித்தும் அவர்களுடைய ஓய்வு தினங்களைக் குறித்தும் முறையே அவரவர்கள் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் வேலையின் தன்மையைக் குறித்தும் ரெஜிஸ்டர் ஒன்று வைத்திருக்கவேண்டும். [பிரிவு 28.]

தண்டனைகள்.

8. (1) யாதொரு இன்ஸ்பெக்டர் தம்முடைய வேலையைச் செய்துகொண்டிருக்கையில் அவரைத் தடுக்கும் யாதொரு நபர்-500 ரூபாய் அபராத தண்டனையாவது மூன்று மாதத்துக்குக் காவல் தண்டனையாவது இவ்விரண்டுமாவது விதிக்கப்படத் தக்க குற்றம் செய்தவராவார்.

(2) யாதொரு நபர் இந்த ஆக்டை அனுசரித்து வைத்துவரப்படும் எந்த ரெஜிஸ்டரையாகிலும் தஸ்தவேஜையாகிலும் ஹாஜர்ப்படுத்தும்படி இன்ஸ்பெக்டர் கேட்பதன்மேல் அதை ஹாஜர்ப்படுத்த நிராகரித்தாலும், யாதொரு நபரைப் பார்வையிடும் உத்தியோகஸ்தர் பரீட்சிக்காதபடி தடுத்தாலும், அவருக்கு 300 ரூபாய் அபராத தண்டனை விதிக்கப்படலாம். [பிரிவு 34.]

9. எவராகிலும் தமக்கு மிகவும் நன்றாய்த் தெரிந்த அளவுக்காயினும் தாம் நம்புகிற அளவுக்காயினும் உண்மையானதல்லாத சங்கதி, பதிவு அல்லது விவரம் அடங்கிய யாதொரு நக்ஷா, ரிடர்ன், நோடிஸ், ரெகார்ட் அல்லது ரிபோர்ட்டைத் தயார் செய்தாலும், கொடுத்தாலும், ஒப்புவித்தாலும், அவருக்கு 500 ரூபாய் அபராத தண்டனையாவது மூன்று மாதம் காவல் தண்டனையாவது இவ்விரண்டுமாவது விதிக்கப்படலாம். [பிரிவு 35.]

10. யாதொரு நபர் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் யாதொரு நக்ஷா, ரிடர்ன், நோடிஸ், ரெஜிஸ்டர், ரெகார்ட் அல்லது ரிபோர்ட்டை அனுப்பத் தவறிப்போனால், அவருக்கு 200 ரூபாய் அபராத தண்டனை விதிக்கப்படலாம். [பிரிவு 36.]

11. எவராகிலும் யாதொரு சுரங்கத்திலாவது அதற்குச் சமீபத்திலாவது நபர்களை வேலையில் அமர்த்திக்கொள்வது அல்லது இருக்கவிடுவது விஷயமாய் இந்த ஆக்டிலாவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு ரெகுலேஷன், விதி அல்லது சகாயச் சட்டத்திலாவது அவைகளின்படி செய்யப்பட்ட யாதொரு உத்தரவிலாவது கண்டுள்ள யாதொரு நிபந்தனையை மீறி நடந்தால், அவருக்கு 500 ரூபாய் அபராத தண்டனை விதிக்கப்படலாம். [பிரிவு 37.]

12. எவராகிலும் (ரெகுலேஷன்களின் நிர்ணயிக்கப்பட்ட சங்கிரகத்தைச் சேர்ந்த 6-வது பகுதியில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி) தற்செயலாய் யாதொரு ஆபத்து நேரிட்டதைக்குறித்து நோடிஸ் கொடுக்கத் தவறிப்போனால் அவருக்கு 500 ரூபாய் அபராத தண்டனையாவது மூன்றுமாத காலத்துக்குக் காவல் தண்டனையாவது இவ்விரண்டுமாவது விதிக்கப்படலாம். [பிரிவு 38.]

13. எவராகிலும் இந்த ஆக்டிலாவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு ரெகுலேஷன், விதி அல்லது சகாயச் சட்டத்திலாவது அவைகளின்படி செய்யப்பட்ட யாதொரு உத்தரவிலாவது கண்டுள்ள எந்த நிபந்தனையையாகிலும் மீறி நடந்திருந்து, அந்தப்படி மீறி நடந்ததற்காக வெளிப்படையாய்த் தண்டனை எதுவும் ஏற்படுத்தப்பட்டிராவிட்டால், அவருக்கு 1000 ரூபாய் அபராத தண்டனை விதிக்கப்படலாம். [பிரிவு 39.]

14. எவ்ராகிலும் இந்த ஆக்டிலாவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு ரெகுலேஷன், விதி அல்லது சகாயச் சட்டத்திலாவது அவைகளின்படி செய்யப்பட்ட யாதொரு உத்தரவிலாவது கண்டுள்ள எந்த நிபந்தனையையாகிலும் மீறி நடந்திருந்து, அந்தப்படி மீறி நடந்ததனால் பிராணச்சேதம் ஏற்படும்பட்சத்தில், அவருக்கு ஒரு வருஷ காலத்துக்குக் காவல் தண்டனையாவது 2,000 ரூபாய் அபராத தண்டனையாவது இவ்விரண்டுமாவது விதிக்கப்படும்; அல்லது அந்தப்படி மீறி நடந்ததனால் தேகத்துக்குப் பிரமாதமாய்த் தீங்கு நேரிடும்பட்சத்தில், அவருக்கு ஆறு மாதகாலத்துக்குக் காவல் தண்டனையாவது 1,000 ரூபாய் அபராத தண்டனையாவது இவ்விரண்டுமாவது விதிக்கப்டுபம். [பிரிவு 40.]

1926 - ம் ௵த்திய இந்து தேசத்து உலோகங்கள் கிடைக்கும் சுரங்கங்களைக் குறித்த ரெகுலேஷன்கள்.

நிர்ணயிக்கப்பட்ட சங்கிரகம்.

ரிடர்ன்களும் நோடிஸுகளும் ரெகார்டுகளும்.

1. முந்திய வருஷத்துக்குச் சம்பந்தப்பட்ட வருஷாந்த ரிடர்ன்களை ஜனவரி மாதம் 21-ம் தேதியன்றைக்காவது அதற்கு முன்பாவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கும் பிரதான இன்ஸ்பெக்டருக்கும் அனுப்பவேண்டும்.

[ரெகுலேஷன் 3.]

2. புதிதாய் ஒரு சுரங்கத்தைத் திறந்தாலும், ஒரு சுரங்கத்தை (வேலை செய்யாமல்) விட்டுவிட்ட பிறகு அல்லது அதில் வேலை செய்வதை நிறுத்தின பிறகு மீண்டும் திறந்தாலும், அதைக்

குறித்து டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு இரட்டைப் பிரதியாக நோடிஸ் அனுப்பவேண்டும்.
[ரெகுலேஷன்கள் 4, 6.]

3. யாதொரு சுரங்கத்தை (வேலை செய்யாமல்) விட்டுவிட்டாலும் அதில் வேலை செய்வதை நிறுத்திவிட்டாலும், சொந்தக்காரர் மாறியிருந்தாலும், ஏஜென்ட் அல்லது மானேஜர் புதிதாய் நியமிக்கப்பட்டிருந்தாலும், மேல்விலாசத்தில் மாறுதல் ஏற்பட்டாலும், அதைக்குறித்துப் பிரதான இன்ஸ்பெக்டருக்கு நோடிஸ் அனுப்பவேண்டும்.
[ரெகுலேஷன்கள் 5, 7, 8.]

4. யாதொரு சுரங்கத்தின் சொத்துவ பாத்தியதையை ட்ரான்ஸ்பர் செய்தால், சுரங்க சம்பந்தமான சகல நக்ஷாக்களையும் புஸ்தகங்களையும் ரெகார்டுகளையும் புதிய சொந்தக்காரருக்கு ட்ரான்ஸ்பர் செய்துவிடவேண்டும்.
[ரெகுலேஷன் 9.]

5. யாதொரு ரெயில்வேக்காகவாவது பொதுஜன சம்பந்தமான யாதொரு காரியத்துக்காகவாவது எடுத்துக்கொள்ளப்பட்ட நிலத்திலிருந்து 50 கஜ தூரத்துக்குள் இருக்கும் ஒரு ஸ்தானத்திலாவது ஸ்தானம் வரையிலாவது சுரங்க வேலைகளை வியாபிக்கும்படிச் செய்ய உத்தேசித்தால், நோடிஸுகளையும் நக்ஷாக்களையும் குறிப்பிடப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டும்.
[ரெகுலேஷன்கள் 10, 11, 12.]

6. யாதொரு சுரங்கத்திலாகிலும் அதற்குச் சமீபத்திலாகிலும் பிராணச் சேதத்தையாவது பிரமாதமாய்த் தேகத்துக்குத் தீங்கையாவது உண்டாக்கும்படி யாதொரு ஆபத்து நேரிட்டாலும், யாதொரு சுரங்கத்திலாகிலும் அதற்குச் சமீபத்திலாகிலும் தற்செயலாய் யாதொரு வெடி நேரிட்டாலும் ஏதாகிலும் பற்றி எரிந்தாலும் தீபிடித்துக்கொண்டாலும் தண்ணீர் திடீரென்று வந்துவிட்டாலும், அந்தச் சுரங்கத்தின் சொந்தக்காரராவது ஏஜென்டாவது மானேஜராவது-அது விஷயத்தை உடனே டெலிபோன் மூலமாகவோ தந்தி மூலமாகவோ பிரதான இன்ஸ்பெக்டருக்குத் தெரிவிக்கவேண்டும்; மேலும், அவர்-அப்படிப்பட்ட தற்செயலான ஆபத்து, வெடி, தீப்பற்றியெரிவது, தீபிடித்துகொள்வது, தண்ணீர் திடீரென்று வந்துவிடுவது ஆகிய இவை நேரிட்டதிலிருந்து இருபத்திநான்கு மணி நேரத்துக்குள் அவைகளைக் குறித்து 9-வது நமூனைப்படி நோடிஸ் எழுதி டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது ஸப் டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது அனுப்பவும் வேண்டும். அவர் அதைப் பிரதான இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவேண்டும். [ரெகுலேஷன் 13.]

7. பிரமாதமானதென்று 13-வது ரெகுலேஷன்படி ஏற்கனவே ரிபோர்ட் செய்திருக்கும் யாதொரு தீங்கின் காரணமாக மரணம் சம்பவித்தால், சுரங்கத்தின் சொந்தக்காரர், ஏஜென்ட் அல்லது மானேஜரானவர் - மரணம் நேரிட்டதென்று தமக்கு சங்கதி தெரிவிக்கப்பட்டதிலிருந்து இருபத்திநான்கு மணி நேரத்துக்குள் அதைக் குறித்து டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது ஸப் டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டுக்காவது நோடிஸ் அனுப்பவேண்டும். அவர் அதை பிரதானப் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவேண்டும். [ரெகுலேஷன் 14.]

நக்ஷாக்கள்.

8. ஒவ்வொரு பொன், மங்கனீஸ், செம்பு, காரீயம், வெள்ளீயம், வுல்ப்ராம் (டங்க்ஸ்டன் என்னும் உலோக மண் எடுக்கும்) சுரங்கத்திலும், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இந்தியா கெஜெட்டில் விளம்பர மூலமாய்க் குறிப்பிடக்கூடிய வேறே சுரங்கங்களிலும் அல்லது வகுப்புகளைச் சேர்ந்த சுரங்கங்களிலும், சகல ஷாப்ட் என்னும் சுரங்க வழிகள், ட்ரைவ் என்னும் சம மட்டமான பாதைகள், வெய்ன் அல்லது பிரதான வேலைசெய்யும் இடங்களுக்குக் குறுக்கே வெட்டப்பட்டிருக்கும் லெவெல் என்னும் சம மட்டமான மார்க்கங்கள், காற்று வருவாய் முதலியவைகளுக்கான வின்ஸ் என்னும் சிறிய ஷாப்டுகள், மேடாயுள்ள பாகங்கள், கிழறைகள் (ஸ்டோப் வடிவமாய்த் தோண்டப்பட்ட தரை) ஆகிய இவைகளையும், இவைகளுடன் சேர்ந்திருக்கும் எவையேனும் டன்னல்களையும் காட்டும் ஒரு நக்ஷாவையும் ஸெக்ஷன் அல்லது ஸெக்ஷன்களையும் சுரங்க ஆபிஸில் வைத்திருக்கவேண்டும். மேலும், அந்த நக்ஷாவில் குத்தகையின்மேல் கைப்பற்றியுள்ள நிலத்தின் எல்லைகளையும், தேதி, சாதாரணமாய் வெய்ன்கள் (பார்கள்) அல்லது நிரஸவஸ்துக்கள் படிந்திருக்கும் இடங்கள் ஆகிய இவைகளுக்குச் சம்பந்தப்பட்ட டிப், ஸ்ட்ரைக் என்னும் கோணங்கள் சகிதமாக மாக்னெடிக் மெரிடியன் என்னும் வட்டத்தையும், தரையின் அடிப்பாகங்கள் இடம் மாறும் விஷயங்களையும் காட்டியிருக்கவேண்டும். அல்லாமலும், வேலை செய்யும் இடங்களின் யாதொரு பாகத்தின்மேலாவது சுரங்க வேலை செய்யும் இடங்களின் யாதொரு பாகத்திலிருந்து 600 அடி தூரத்துக்குள் இருக்கும் யாதொரு ஸ்தானத்திலாவதுள்ள ரெயில்வேக்கள், ஆறுகள், ஓடைகள், ரஸ்தாக்கள், நீர் நிலைகள் முதலியவைகளைப்போல், பிரஸ்தாப இடத்தின் எல்லைகளுக்குள் இருக்கும் மேற்பரப்பு சம்பந்தமான சகல முக்கியமான அம்சங்களையும் காட்டியிருக்கவேண்டும். எந்த சுரங்களில் வேலையானது பூமிக்கு அடுத்து மேலுள்ள தரைக்குக்கீழ் செய்யப்படவில்லையோ அந்த சுரங்கங்களும், எந்த சுரங்கங்களில் கீழறை உலோகங்கள் கிடைக்குமா கிடைக்காதாவென்று கண்டறியும் காரியங்களுக்காக மாத்திரம் தோண்டப்படுகின்றதோ அந்த சுரங்கங்களும் நக்ஷாக்கள் சம்பந்தமான நிர்ப்பந்தனைகளினின்று நிவாரணை செய்யப்பட்டிருக்கின்றன. [ரெகுலேஷன்கள் 15, 16.]

நிர்வாகம்.

9. ஒவ்வொரு சுரங்கத்திலும் இன்ஸ்பெக்டர்கள் தங்கள் ஆராய்ச்சிக் குறிப்புகளை எழுதி வைக்கக்கூடியதாய் பார்வையிடுவது சம்பந்தமான புஸ்தகம் ஒன்று வைத்திருக்கவேண்டும். அந்தப் புஸ்தகத்தின் ஆரம்பத்தில் சுரங்கத்தின் பெயரும், சொந்தக்காரர், ஏஜென்ட், மானேஜர் ஆகிய இவர்களுடைய பெயரும் மேல்விலாசமும் எழுதிவைக்கவேண்டும்.
[ரெகுலேஷன் 20.]

10. யாதொரு சுரங்கத்தின் சொந்தக்காரர் அல்லது ஏஜெண்டானவர் - 21 வயதுக்குக் கீழ்ப்பட்டிராதவராயுள்ள தகுந்த ஒரு நபரை அந்த சுரங்கத்தின் மானேஜராக நியமிக்கவேண்டும். ஒரு நபர் பல சுரங்கங்களின் மானேஜராக நியமிக்கப்படலாம். ஆனால், அப்படிப்பட்ட சுரங்கங்களின் அளவும் அவைகள் ஒன்றுக்கொன்றுக்குள்ள தூரமும் மிகவும் அதிகமாயிருந்து அதனால் அவர் தம்முடைய அலுவல்களைச் செவ்வையாய்ச் செய்வதற்குத் தடை ஏறபடக்கூடாது.

மானேஜர் வராதிருக்கும் காரணத்தினாலாவது வேறே யாதொரு காரணத்தினாலாவது மானேஜர் தம்முடைய அலுவல்களைச் செய்ய முடியாமற்போனால், சொந்தக்காரர், ஏஜெண்ட் அல்லது மானேஜரானவர் - ஒரு மாதத்துக்கு மேற்படாத ஒரு கால அளவுக்கு மானேஜராய்ப் பிரவர்த்திக்கும்படி தகுந்த ஒரு நபருக்கு எழுத்துமூலமாய் அதிகாரம் கொடுக்கவேண்டும். மேலும், அவர் - அந்தப்படி அதிகாரம் கொடுத்ததற்குள்ள காரணத்தையும், அந்தப்படி அதிகாரம் கொடுக்கப்பெற்ற நபரின் யோக்கியதாம்சங்களையும் அனுபவத்தையும் கண்டெழுதி பிரதான இன்ஸ்பெக்டருக்கு நோடிஸ் ஒன்றைக் காலதாமதமில்லாமல் அனுப்பவேண்டும். [ரெகுலேஷன் 21.]

ஷாப்டுகளும் வெளியே போகும் வழிகளும்.

11. மேற்புறத்திலுள்ள தண்ணீர் திடீரென்று சுரங்கத்துக்குள்ளே பாய்வதனால் எவ்வித மான அபாயமாவது நேரிடக்கூடியபடி சுரங்கத்தின் யாதொரு பாகம் அமைக்கப்பட்டிருந்தால், அந்தப்படி தண்ணீர் திடீரென்று பாயாமலிருப்பதற்குப் போதுமான பாதுகாப்பு ஏற்படுத்தி அதைப் பராமரித்துவரவேண்டும்.

[ரெகுலேஷன் 22.]

12. பூமிக்குக்கீழ் இருபதுக்கு மேற்பட்ட நபர்கள் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் ஒவ்வொரு சுரங்கத்திலும் ஒன்றுக்கொன்று 20 அடிக்குக் குறைந்து சமீபமாயிராத ஷாப்டுகள் அல்லது வெளியே போகும் வழிகள் குறைந்தது இரண்டு இருக்கவேண்டும். அவைகள் - சுரங்கத்தில் வேலையில் அமர்த்திக் கொள்ளப்பட்டிருக்கும் சகல நபர்களும் உள்ளே போவதற்கும் வெளியே வருவதற்கும் பிரத்தியேகமான வழிகளாயிருக்கவேண்டும்.

அப்படிப்பட்ட ஷாப்டுகள் அல்லது வெளியே போகும் வழிகள் ஒவ்வொன்றிலும் ஆள்கள் சுரங்கத்துக்குள் இறங்குவதற்கும் அதிலிருந்து மேலே ஏறுவதற்கும் சரியான ஏற்பாடுகள் செய்யவேண்டியதுமல்லாமல், உபகரணங்கள் அவசியமாயிருந்தால் அவைகளை எப்போதும் உபயோகிப்பதற்குக் கிடைக்கக்கூடியபடி வைத்திருக்கவும் வேண்டும். [ரெகுலேஷன் 23.]

13. (1) பூமிக்குக்கீழ் ஷாப்டுகளுக்கு அடுத்தாற்போல் ஆள்கள் வேலை செய்யவேண்டியிருக்கும் சகல இடங்களிலும்,

(2) இருட்டிப்போனபிறகு, வேலை செய்யும் சகல ஷாப்டுகளின் உச்சிகளிலும் ஜனங்களை உயரத்தூக்குவதற்கும் கீழே இறக்குவதற்கும் உபயோகிக்கப்படும் சகல சுற்றும் என்ஜின்களிடத்திலும்

நிலையான விளக்குகளைப் போதுமான அளவுக்கு ஏற்படுத்தி அவைகளை வேலை செய்யும் மணி நேரங்களில் உபயோகிக்கவேண்டும்.

ஜனங்களையாவது சாமான்களையாவது உயரத்தூக்குவதும் கீழே இறக்குவதும்.

14. எந்த ஷாப்டுகளில் ஆள்கள் யாதிர சக்தியினால் உயரத்தூக்கப்படுகிறார்களோ அல்லது கீழே இறக்கப்படுகிறார்களோ அந்த ஷாப்டுகளிலே சுற்றும் உபகரணங்களின் விஷயத்தில்—

(a) ட்ரம் ஷாப்டின்மேல் ஒன்று அல்லது பலப்ரேக்குகளையும் அல்லது பாரம் ஏற்றியிருக்கும் கூடு, ஸ்கிப் என்னும் இரும்புதொட்டி அல்லது பக்கெட் என்னும் சாலை ஷாப்டில் எந்த ஸ்தானத்திலாகிலும் தாங்கிப் பிடிப்பதற்குப் போதுமான சக்தியையும்,

(b) ஷாப்டானது 100 அடிக்கு மேற்பட்ட ஆழமுள்ளதாயிருந்தால், ஆழத்தைச் சரியாய்க் காட்டும் கருவி ஒன்றையும்,

(c) ஷாப்டானது 150 அடிக்குமேற்பட்ட ஆழமுள்ளதாயிருந்தால், வழிகாட்டிகளையும்,

(d) கயிறு நழுகிப்போகாமல் தடுப்பதற்காக ட்ரம்மின்மேல் விளிம்புகளையும் அல்லது கொம்புகளையும்

ஏற்படுத்தவேண்டும்.

கூடுகளுக்கு டப் காட்ச் என்னும் சாதனங்களையும் கெட்டியான வாயில்களையும் கைப்பிடி சட்டங்களையும ஏற்படுத்தவேண்டும். மேலும், அது மேற்புறத்தில் பூர்த்தியாய் மூடப்பட்டிருக்க வேண்டியதுமல்லாமல், ஆள்களாவது வஸ்துக்களாவது பக்கங்களுக்கப்பால் பிதுங்கி வாராதபடி தடுக்கும்பொருட்டு பக்கங்களில் மூடப்பட்டிருக்கவும் வேண்டும்.

யாதொரு வேலை செய்யும் ஷாப்டிலாவது ப்ளேனிலாவது, குட்டையான கப்ளிங் (பிணைக்கும்) சங்கிலிக்குத் தவிர மற்றப்படி, ஆள்களைக் கீழே இறக்குவதற்காகிலும் உயரத்தூக்குவதற்காகிலும் ஒற்றை வளையங்கள்போட்ட சங்கிலிகளை உபயோகிக்கக்கூடாது.

15. 150 அடிக்கு மேற்பட்ட ஆழமுள்ளதாயிருந்து, நிரச வஸ்துக்களை எடுப்பதற்காவது ஆள்களைக் கீழே இறக்குவதற்கு அல்லது உயரத்தூக்குவதற்காவது உபயோகிக்கப்படுவதாயுள்ள ஒவ்வொரு வேலை செய்யும் ஷாப்டின் விஷயத்திலும், ஷாப்டின் அடியிலிருந்து மேற்புறத்துக்கும், மத்தியில் உள்ள இன்ஸெட் என்னும் ஒவ்வொரு பாகத்திலிருந்து மேற்புறத்துக்கும், ஷாப்டின் மேற்புறத்திலிருந்து சுற்றும் என்ஜினுக்கும் ஸிக்னல் அனுப்புவதற்குச் சரியான சாதனங்களை ஏற்படுத்தவேண்டும். சகல ஸிக்னல்களையும் யந்திர இசைப்புகளின் மூலமாகவாவது மின்சார இசைப்புகளின் மூலமாகவாவது அனுப்பவேண்டும்.

முதல் மூன்று அல்லது முக்கியமான ஸிக்னல்கள் எவையென்றால் :—

ஒரு தட்டு அல்லது மணி — என்ஜின் வேலை செய்யாமலிருக்கும்போது உயரத் தூக்கவும்.

ஒரு தட்டு அல்லது மணி	என்ஜின் இயங்கிக்கொண்டிருக்கும்போது நிறுத்தவிடவும்.
இரண்டு தட்டு அல்லது மணி.	கீழே இறக்கவும்.
மூன்று தட்டு அல்லது மணி.	ஆள்கள் உயரப் போகவோ கீழே இறங்கவோ சித்தமாயிருக்கிறார்களென்பது.
ஷை ..	பதில் கொடுப்பதற்கு உபயோகிக்கப்பட்டால்—ஆள்கள் கூடில் அல்லது ஏறிக்கொண்டு போவதற்கான வேறே சாதனததில் பிரவேசிக்கலாமெனபது.

16. மானேஜராவது, மானேஜரால் நியமிக்கப்பட்ட யோக்கியதையுடைய நபர் அல்லது நபர்களாவது - ஒவ்வொரு இருபத்தினான்கு மணி நேரத்திலும் குறைந்தது ஒரு முறை பூமிக்குக்கீழும் பூமிக்குமேலும் வாஸ்தவத்திலே உபயோகிக்கப்பட்டுவரும் யந்திரங்களின் வெளிப்பாகங்களின் நிலைமையையும் ஷாப்டிலுள்ள ஹெட்கியர், கயிறுகள், சங்கிலிகள், கூடுகள், வழிகாட்டிகள், கண்டக்டர்கள், இவைகளைப்போன்ற இதர உபகரணங்கள் ஆகிய இவைகளின் நிலைமையையும் பரிசோதித்துப்பார்க்கவேண்டியதுமல்லாமல், சுரங்கத்திலே ஏககாலத்தில் 20 பேருக்கு மேற்பட்டு வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும்பட்சத்தில், அந்தப்படி பரிசோதித்ததன் முடிவைப்பற்றி பூர்த்தியாயும் சரியாயும் உள்ள ரிபோர்ட் ஒன்றை பக்கங்களுக்கு இலக்கமிட்டிருக்கும் புஸ்தகத்தில் காலதாமதமில்லாமல் எழுதவேண்டும் அல்லது எழுதுவிக்கவேண்டும். [ரெகுலேஷன் 24.]

17. ஒரே கூட்டிலாகிலுஞ்சரி மற்றப்படியாகிலுஞ்சரி, அதே ஷாப்டில் ஆள்களைச் சுற்றி (தூக்கி அல்லது இறக்கி)க்கொண்டிருக்கும்போது நிரச வஸ்துக்களையாவது டப் என்னும் தொட்டிகளையாவது சாமான்களையாவது (தூக்குவதற்காகவோ இறக்குவதற்காகவோ) சுற்றக்கூடாது. [ரெகுலேஷன்கள் 26, 27.]

18. யாதொரு ஷாப்டில் அல்லது வின்ஸ் என்னும் சிறிய ஷாப்டில் உபயோகிக்கப்பட்டுவரும் ஒவ்வொரு பாரஞ்சாம்பி, விம் என்னும் செங்குத்தான தொட்டி அல்லது விப் என்னும் சம்மட்டிக்கும், ஸ்டாப்பர் என்னும் நிறுத்துவதற்கான சாதனமாவது வின்ச் பெக் (peg) என்னும் கடையாணிபோன்ற முளையாவது உறுதியான வேறே பிடியாவது ஏற்படுத்தவேண்டும். [ரெகுலேஷன் 29.]

19. கூட்டிலுள்ள பக்கெட் என்னும் சாலிலாவது ஸ்கிப் என்னும் இரும்பு தொட்டியிலாவது யாதொரு வாகனிலாவது போட்டிருக்கும் வஸ்துக்களில் எதுவாகிலும் வெளியே விழக்கூடிய உயரத்துக்கு அதில் வஸ்துக்களை நிரப்பக்கூடாது. மேலும், கூட்டின் அடிப்பாகத்தைச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். [ரெகுலேஷன் 30.]

20. கருவிகள், மரம் முதலியவை கூட்டிலாவது, ஸ்கிப் என்னும் இரும்புதொட்டியிலாவது பக்கெட் என்னும் சாலிலாவது போடப்பட்டு அவைகளின் முனைகள் அந்தக்கூடு முதலியவைகளின் உச்சிக்குமேல் பிதுங்கி வந்திருந்தால், அந்தக் கருவிகள், மரம் முதலியவைகளைக் கீழே இறக்கும்போதாகிலும் உயரத் தூக்கும்போதாகிலும், மேலேகண்ட பிதுங்கி வந்திருக்கும் முனைகளைக் கயிற்றுடனாவது வில்லுடனாவது உறுதியாய்ச் சேர்த்துக் கட்டவேண்டும். [ரெகுலேஷன் 31.]

21. மானேஜரால் அனுமதி கொடுக்கப்படக்கூடிய சங்கியைக்கு அதிகமான ஆள்களை ஒரே கூட்டிலாவது டப் என்னும் தொட்டியிலாவது ஸ்கிப் என்னும் இரும்பு தொட்டியிலாவது பக்கெட் என்னும் சாலிலாவது ஏககாலத்தில் ஏறிக்கொண்டு போகவொட்டக்கூடாது. மேலும், அந்தப்படி அனுமதி கொடுக்கப்பட்டிருக்கும் சங்கியையைக் குறிப்பிடும் நோடிஸ் ஒன்றை ஒவ்வொரு ஷாப்டின் உச்சியிலும், ஷாப்டிலுள்ள ஒவ்வொரு இன்ஸெட்டிலும் ஒட்டவேண்டும். [ரெகுலேஷன் 32.]

22. சாய்வான எந்த இடத்தின்மேல் இழுக்கும் சாதனமானது முனையில்லாத கயிற்றினலாவது முனையில்லாத சங்கிலியினலாவது செய்யப்பட்டதாயிராமல் யந்திரசக்தியினலாவது பூமிக்குள்ள இழுக்கும் சக்தியினலாவது வேலை செய்யப்பட்டுவருகிறதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு சாய்வான இடத்தின் உச்சியிலும், வாகன்கள் ஓடிப்போய்விடுவதைத் தடுப்பதற்காக ஸ்டாப் ப்ளாக் (block) எனனும் கட்டை முதலியவைகளையாவது அதைப்போன்ற வேறே சாதனங்களையாவது அமைத்திருக்கவேண்டும். வாகன்கள் ஓடிப்போய்விடும்பட்சத்தில், வாகன்கள் கீழே யிறங்குவதைத் தடுப்பதற்காகவாவது அவைகள் கீழே போகும்போது அவைகளின் திசையை மாற்றுவதற்காகவாவது அதிகப்படியாய் ஸ்டாப் ப்ளாக் என்னும் கட்டைகளையாகிலும், ரன்னவே ஸ்விட்ச் என்னும் சாதனங்களையாகிலும் அவைகளைப்போன்ற வேறே உபகரணங்களையாகிலும் முதல் ஸ்டாப் ப்ளாக்குகளுக்குக் கீழே வாகன்கள் தொடரின் நீளத்துக்கு மேற்பட்ட தூரத்தில் பொருத்தியிருக்கவேண்டும். உயர ஏறும் வாகன் அல்லது வாகன்கள் தொடரின் பின்னே வாகன் அல்லது வாகன்கள் பின்னுக்கே மறுபடியும் போவதைத் தடுப்பதற்காக பாக்ஸ்டே (backstay) அல்லது ட்ராக் (drag) என்னும் சாதனத்தையாவது வேறே தகுதியான சாதனத்தையாவது பொருத்தியிருக்கவேண்டும். [ரெகுலேஷன் 35.]

சுரங்கங்களில் வேலை செய்யும் இடங்கள்.

23. சுரங்கத்தில் வேலை செய்யும் ஆள்களுக்கு அபாயம் நேரிடுவதைத் தடுக்கும்பொருட்டு, திறந்தலையாயுள்ள வேலைசெய்யும் இடங்களிலே பக்கங்களைச் சரியானபடி சரி ாகவோ படிப்படியாய் அமைத்தோ அல்லது பந்தோபஸ்து பண்ணியோ வைக்கவேண்டியதுமல்லாமல், மரங்களையும் உயரத்திலுள்ள பளுவான பொருள்களையும் தளர்த்தியாயுள்ள தரை முழுவதையும் அப்படிப்பட்ட சகல சாமான்களையும் ஓரத்திலிருந்து அப்புறப்படுத்தி அல்லது பந்தோபஸ்து பண்ணிவைக்கவும் வேண்டும். [ரெகுலேஷன்கள் 38, 39, 40.]

24. பிரயாணம் செய்வதற்குரிய சகல பாட்டைகள், வேலைசெய்யும் சகல இடங்கள் ஆகிய இவைகளின் கூரைகளையும் பக்கங்களையும் பந்

தோபஸ்தாய் ஏற்படுத்தி வைத்திருக்கவேண்டும். [ரெகுலேஷன் 41.]

25. தரை அபாயமற்றதாயிராத இடத்திலே, உபயோகிக்கப்பட்டுவரும் சகல ஷாப்டுகளையும், தகுதியான மரவேலையைக்கொண்டோ தாங்குவதற்குரிய இதர வழிவகைகளிலோ பந்தோபஸ்து பண்ணவேண்டும். [ரெகுலேஷன் 42.]

26. மானேஜரால் நியமிக்கப்பட்ட தகுதியான யாதொரு நபராவது நபர்களாவது - யாதொரு நபர் சுரங்கத்தின் எந்த பாகத்தில் வேலை செய்யவேண்டியிருக்கிறதோ அல்லது எந்த பாகத்தின் வழியாய்ப் போகவேண்டியிருக்கிறதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு பாகத்தையும், காற்றுவருவாய், கூரை, பக்கங்கள், பொதுவான பந்தோபஸ்து ஆகிய இவைகள் சம்பந்தப்பட்டமட்டில் அதன் நிலைமையை நிச்சயித்தறியும் காரியத்துக்காக ஒவ்வொரு முறையாட்கள் வேலை செய்யும்பொழுதும் குறைந்தது ஒரு தடவையாவது பார்வையிடவேண்டும். மேலும், ஷை நபர் அல்லது நபர்கள்-எந்த ஷாப்டுகள் மூலமாய் ஆள்கள் உயரப்போவதும் கீழே இறங்குவதுமா யிருக்கிறார்களோ அப்படிப்பட்ட சகல ஷாப்டுகளையும் ஒவ்வொரு வாரமும் குறைந்தது ஒரு தரமாவது பார்வையிடவேண்டும். சுரங்கத்திலே ஏககாலத்தில் 20 பேருக்கு மேற்பட்டு வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருந்தால், மேலேகண்டபடி பார்வையிட்டதைப்பற்றிய ரிபோர்ட் ஒன்றைச் சுரங்கத்திலே இதுகாரியத்துக்காக வைத்திருக்கும் புஸ்தகத்தில் காலதாமதமில்லாமல் எழுதவேண்டும். [ரெகுலேஷன் 43.]

யாதொரு நபர் 21 வயதடைந்தவராயிருந்து சுரங்கங்களில் வேலை செய்வதைக்குறித்து அனுஷ்டானக் கிரமத்தில் போதுமான அனுபவம் அடைந்தவராயிருந்தாலன்றி மற்றப்படி, அவரை மேற்சொல்லியபடி பார்வையிடுவதற்கு நியமிக்கக்கூடாது. [ரெகுலேஷன் 21 (4).]

27. யாதொரு இடத்தில் வேலை செய்யப்பட்டுவந்தாலும், ஆள்கள் நிறுத்திவைக்கப்பட்டாலும் அதன் வழியாய் ஆள்கள் போனாலும் அப்படிப்பட்ட ஒவ்வொரு இடமும் - மானேஜராலாவது பூமிக்குக் கீழ்ப்பாகத்தின் மானேஜராலாவது நியமிக்கப்பட்ட தகுதியான ஒரு நபரின் விசாரணையில் வைக்கப்பட்டிருக்கவேண்டும். [ரெகுலேஷன் 44.]

28. யாதொரு வேலை செய்யும் இடமாவது பிரயாணம் செய்யும் பாட்டையாவது அபாயமற்றதல்லவென்று தெரியவந்தால், அபாயகரமான விஸ்தீர்ணத்திலிருந்து சகலமான ஆள்களையும் அழைத்துவிடவேண்டும். மேலும், அபாயத்தை நீக்கும் அல்லது பிராணனைக் காக்கும் காரியத்துக்காகவன்றி மற்றப்படி, அந்த இடத்துக்கு எவரும் போகாதபடி சகல பிரவேசவாயில்களுக்கும் பந்தோபஸ்தாய் அடைப்பு ஏற்படுத்தி தடுக்கவேண்டும். [ரெகுலேஷன் 45.]

29. ஷாப்டுகள், வின்ஸுகள், ஷூட்டுகள், தள்ளுவதற்கான துவாரங்கள், யாதொரு டிரைவுக்குக்கீழ் 10 அடிக்கு மேற்பட்டு ஆழமாயுள்ள ஸ்டோப் என்னும் தோண்டப்பட்ட இடத்துக்குப்போகும் எவையேனும் வழிகள் அபாயகரமான இதர வழிகள் ஆகிய இவைகளின் உச்சியிலும் உச்சிக்கும் அடிப்பாகத்துக்கும் இடையிலுள்ள சகல பிரவேச வாயில்களுக்கும், ஆள்களாவது பொருள்களாவது அவைகளில் விழுந்துவிடுவதைத் தடுக்கும்பொருட்டு நிலையான அல்லது அப்புறப்படுத்தக்கூடிய தடை ஏற்படுத்தவேண்டும். யாதொரு ஷாப்ட், வின்ஸ், மேடான தரை அல்லது ஸ்டோப் என்னும் தோண்டப்பட்ட இடமானது பிரயாணம் செய்யும் பாட்டைக்காவது வேலை செய்யும்போது ஆள்கள் இருக்கும் இடத்துக்காவது நேராகப் போவதாயிருந்தால், அப்படிப்பட்ட இடங்களில் போகும்போது மேலேயிருந்து ஏதாகிலும் விழுந்து அபாயம் நேரிடாதபடி பாதுகாப்பு ஏற்படுத்தவேண்டும். [ரெகுலேஷன் 46.]

30. ஷாப்டின் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்துக்கு ஆள்கள் போகவேண்டியிருக்கிற ஒவ்வொரு ஷாப்ட் ஸ்டேஷனிலும், சுற்று அறையில் பிரவேசிக்காமலாவது அதைத் தாண்டிப்போகாமலாவது மேலே கண்டபடி அவர்கள் போவது சாத்தியமாயிருப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். [ரெகுலேஷன் 47.]

31. சகல ஏணிகளையும், ஏணிவழிகளையும், மேடைகளையும், கதவுகளையும் அடைப்புகளையும் இதர உபகரணங்களையும் பூமிக்குக் கீழ் உபயோகிக்கப்பட்டு வரும் பொருள்களையும் சரியான நிலைமையில் வைத்திருக்கவேண்டும். சிறிதுகாலத்துக்கு உபயோகிக்கப்படும் ஏணிகள், மேடைகள் அல்லது உயர ஏறுவதற்கான அல்லது வேலை செய்யும்போது அடிவைப்பதற்கான இதர சாதனங்களை, லிங்குகளிலும் வின்ஸுகளிலும் மேடான தரைகளிலும் ஸ்டோப் என்னும் தோண்டப்பட்ட இடங்களிலும் அவை அவசியமாயுள்ள இதர இடங்களிலும் ஏற்படுத்தவேண்டும். [ரெகுலேஷன் 48.]

32. வேலைசெய்துவரும் யாதொரு இடமானது அபாயம் விளைக்கக்கூடியபடி தண்ணீர் சேர்ந்திருக்கிற அல்லது வெகுசாய் சேர்ந்திருக்கக்கூடிய யாதொரு இடத்துக்குச் சமீபமாய் வரும்போது, வேலை செய்யும் இடத்தின் அகலம் அல்லது உயரமானது ஆறு அடிக்கு மேற்படக்கூடாது. மேலும், தண்ணீர் பாய்வதனால் அபாயம் விளைவதைத் தடுக்கும்பொருட்டு, முகப்புக்குப் போதுமான தூரத்தில் முன்பாக துவாரங்கள் துளைத்துவைத்திருக்கவேண்டும். [ரெகுலேஷன் 49.]

33. சுரங்கத்தைச் சேர்ந்த ஷாப்டுகளும் அதில் வேலை செய்யும் இடங்களும் வேலை செய்வதற்காவது அவைகள் வழியாய்ப் போவதற்காவது தகுதியான நிலைமையிலிருக்கும்பொருட்டு, புகையைப்போக்கிவிடவும் தீப்பற்றியெரியத்தக்கவைகளாயும் தீங்கு உண்டாக்கத்தக்கவைகளாயுமுள்ள காஸ் (gas) என்னும் வாயுவகைகளின் பலத்தைக் குறைத்து அவைகளினால் எவ்வித தீங்கும் உண்டாகாதபடி செய்யவும் ஒவ்வொரு சுரங்கத்திலும் காற்று வருவாய் போதுமானதாயிருக்கவேண்டும். [ரெகுலேஷன் 50.]

34. பூமிக்குக் கீழ் இருக்கும் வேலை செய்யும் இடங்கள், ஷாப்டுகள், ஸம்ப் என்னும் குழிகள் அல்லது வின்ஸுகள் சிறிதுகாலம் உபயோகிக்கப்படாமலிருந்த பிறகு, அவைகளுக்குள் வேலை ஆள்களை மறுபடியும் போகவிடுவதற்குமுன் அவைகளைச் செவ்வையாய்ப் பரிசோதனை செய்யவேண்டும். [ரெகுலேஷன் 51.]

எணி வழிகள்.

35. செங்குத்தாயுள்ள ஷாப்டுகளுடன் 25 டிக்ரியாவது அதற்குக் குறைந்தாவதுள்ள கோணம் ஏற்படும்படி அமைக்கப்பட்டிருக்கும் எணி ஷாப்டுகளில், 35 அடிக்கு மேற்படாத தூரம் இடையில் விட்டுவிட்டு மேடைகள் ஏற்படுத்தவேண்டும். மேலும், அந்த மேடைகளிலுள்ள திறந்தலையான இடங்களுக்குச் சரியாய்ப் போகும்படி எணிகள் அமைக்கவேண்டும். செங்குததாயுள்ள ஒவ்வொரு 10 அடிக்கும் சமமட்டத்தில் ஒரு அடிக்குக் குறையாமல் சாய்வு ஏற்படும்படியாக எணிகளைப் பொருத்தவேண்டும். [ரெகுலேஷன் 54.]

36. எணி ஷாப்டுகளின் விஷயத்தில் சமமட்டத்தைப் பொறுத்தமட்டில் சாய்வானது 65 டிக்ரிக்குக் குறைவாகவும் 30 டிக்ரிக்கு அதிகமாகவும் இருந்தால், ஷாப்டின் அடிப்பாகம் அல்லது சாய்வின் நெடுக 55 அடி தூரத்துக்கு அதிகப்படாமல் இடையில் விட்டுவிட்டு மேடைகள் அமைக்கவேண்டும். [ரெகுலேஷன் 55.]

37. சகல மேடைகளுக்கும் பந்தோபஸ்தாய் அடைப்பு ஏற்படுத்தவேண்டும். [ரெகுலேஷன் 56.]

38. சகல எணிகளையும் ஷாப்டுகளின் பக்கங்களுக்காவது ஷாப்டுகளில் அமைத்திருக்கும் மர வேலைக்காவது சேர்த்து பந்தோபஸ்தாய்க் கட்டவேண்டும். [ரெகுலேஷன் 57]

39. சகல எணிகளும் ஷாப்டின் உச்சிக்குமேலும் ஒவ்வொரு மேடைக்குமேலும் குறைந்தது மூன்றடியாகிலும் நீண்டுவந்திருக்கவேண்டும்; அல்லது, அந்த இடங்களிலே சௌகரியமான ஸ்தானங்களில் அவைகளை உறுதியாய்ப் பிடித்துக்கொள்ளத்தக்க சாதனங்கள் ஏற்படுத்தவேண்டும். [ரெகுலேஷன் 58.]

40. யாதொரு எணிவழியானது இதர காரியங்களுக்கும் உபயோகிக்கப்படும் ஷாப்டின் ஒரு பாகமாயிருந்தால், அதை இதர பாகங்களுடன் சம்பந்தப்படாதபடி மூடிவிடவேண்டும். [ரெகுலேஷன் 59.]

41. யாதொரு எணி வழியானது பிரயாணம் செய்யும் யாதொரு பாட்டையில் போய்ச்சேருவதாயிருந்தாலும் ஆள்கள் வைத்துவைக்கப்பட்டிருக்கிற அல்லது நடமாடுகிற யாதொரு இடத்தில் போய்ச்சேருவதாயிருந்தாலும், அப்படிப்பட்ட ஒவ்வொரு எணி வழிக்கும் ஒரு கதவாவது பலமான அடைப்பாவது ஏற்படுத்தவேண்டும். [ரெகுலேஷன் 60.]

வெடிக்கத்தக்க வஸ்துக்கள்.

42. வெடிக்கத்தக்க வஸ்துக்களைக் குடியிருக்கும் வீட்டுக்குள் கொண்டுபோகவுங்கூடாது அங்கே வைத்திருக்கவுங்கூடாது; ஆனால், அவைகளைச் சரியாய்க் கட்டப்பட்ட ஒரு (மாகஜினிலேயே) மருந்துகிடங்கிலேயே வைத்திருக்கவேண்டும். [ரெகுலேஷன் 63.]

43. வெடிக்கத்தக்க வஸ்துக்களை, எழுத்து மூலமாய் நியமிக்கப்பட்ட தகுதியான நபர்களுக்கு மாத்திரமே கொடுக்கவேண்டும்; மேலும், அப்படிப்பட்ட நபர்களின் பெயர்களை இது காரியத்துக்காக வைத்துவரப்படும் ஒரு புஸ்தகத்தில் எழுதிவைக்கவேண்டும். மேலும், அதிகாரம் கொடுக்கப்பெற்றிராத எந்த நபரும் வெடிக்கத்தக்க வஸ்துக்களைத் தம் ஸ்வாதீனத்தில் வைத்திருக்கக்கூடாது. [ரெகுலேஷன் 64.]

44. டெட்டொனேட்டர்களை பந்தோபஸ்தாய்ப் பூட்டியுள்ள பெட்டியில் வைத்து வேறே எந்த வெடிக்கத்தக்க வஸ்துவினின்றும் பிரத்தியேகப்படுத்திவைக்கவேண்டும். கெட்டிக்கப்போகும் கார்ட்ரிட்ஜை (தோடாவை) உபயோகிக்கப்போகிறவரையில் அதற்குள் டெட்டொனேட்டரைப் போடக்கூடாது. [ரெகுலேஷன் 67.]

45. பூமியின்கீழ் இருக்கும் யாதொரு மருந்து கிடங்கு அல்லது கிடங்குக்குள் சிம்னி முதலிய மேல்மூடியில்லாத விளக்கு எதையும் கொண்டுபோகக்கூடாது. [ரெகுலேஷன் 69.]

46. (கற்பாறை முதலியவைகளைப்) பிளக்கும் சகல வேலைகளையும் பதினெட்டு வயதுக்கு உட்படாதவர்களாய் மானேஜராலாவது பூமியின் கீழ்ப்பாகங்களின் மானேஜராலாவது போர்மனுலாவது நியமிக்கப்பட்டிருக்கும் தகுந்த யோக்கியதையுள்ள நபர்கள் செய்யவேண்டும், அல்லது அவர்கள் நேரே செய்யும் திட்டங்களின்படி நடத்தவேண்டும். இந்த நபர்களின் பெயர்களை இதுகாரியத்துக்காக வைத்துவரப்படும் ஒரு புஸ்தகத்தில் பதியவேண்டும். [ரெகுலேஷன் 71.]

47. இத்தனை குண்டுகள் வெடிதீர்க்கப்பட்டன என்பதையும், இன்ன அளவுக்கு வெடிக்கத்தக்க வஸ்துக்கள் உபயோகிக்கப்பட்டன என்பதையும், (எவையேனும் குண்டுகள் தீ பிடிக்கத் தவறிப்போயிருந்தால்) இத்தனை குண்டுகள் தீ பிடிக்கத் தவறிப்போயின என்பதையும் இதுகாரியத்துக்காக வைத்துவைக்கப்படும் யாதொரு புஸ்தகத்தில் பிரதி தினமும் எழுதிவைக்கவேண்டும்.

48. உபயோகிக்கப்படாமலிருக்கும் சகல வெடிக்கத்தக்க வஸ்துக்களையும் ஆலசியமில்லாமல் திருப்பிக்கொண்டுவந்து மருந்து கிடங்கில் கொடுத்துவிடவேண்டும். [ரெகுலேஷன் 73.]

49. ஒவ்வொன்றிலும் ஐந்து பவுண்டுக்கு மேற்படாமல் அடங்கியுள்ள உறுதியான யாதொரு பெட்டி, டப்பி அல்லது பையில் தவிர மற்றப்படி சுரங்கத்துக்குள் எந்த வெடிக்கத்தக்க வஸ்துவையும் கொண்டுபோகக்கூடாது. [ரெகுலேஷன் 74.]

50. வெடிக்கத்தக்க வஸ்துக்களை எணியின் மேல் கொண்டுபோகும்போது, ஒவ்வொரு பெட்டி, டப்பி அல்லது பையையும் அதைக் கொண்டுபோகும் நபர் தம்முடைய தேகத்துடன் பந்தோபஸ்தாய்க் கட்டிக்கொள்ளவேண்டும். [ரெகுலேஷன் 75.]

51. யாதொரு துவாரத்தில் மருந்திடும் அல்லது கெட்டிக்கும் வேலையில் எந்த நபரும் இரும்பினுல் அல்லது எஃகினுல் செய்த ஆயுதத்தை உபயோகிக்கக்கூடாது. மேலும், எந்த வெடிக்கத்தக்க வஸ்துவையும் துவாரத்துக்குள் பலமாய் அழுத்தக்கூடாது. [ரெகுலேஷன் 76.]

52. பூமியின்கீழுள்ள வேலை செய்யும் இடத்தில் வெடிதீர்ப்பதற்குமுன், அக்கம்பக்கத்திலுள்ள நபர்களுக்கு எச்சரிக்கை பண்ணவேண்டும். மேலும், வெடிதீர்க்கப்போகும் இடத்துக்கு வரும் ஒவ்வொரு வழியிலும் காவல் ஏற்படுத்தவேண்டும். [ரெகுலேஷன் 78.]

பூமியின்கீழுள்ள இரண்டு வேலை செய்யும் இடங்கள் ஒன்றுக்கொன்று 10 அடி தூரத்துக்குள் வந்திருந்தால், அப்படிப்பட்ட வேலை செய்யும் இடங்களில் எதிலாகிலும், மற்றொரு வேலை செய்யும் இடத்திலிருந்து வேலையாள்களை வந்துவிடும்படி செய்து, அதற்கு அடைப்பு ஏற்படுத்தியிருந்தாலன்றி மற்றப்படி, (கற்பாறை முதலியவைகளைப்) பிளக்கும் வேலை எதையும் செய்யக்கூடாது. [ரெகுலேஷன் 79.]

53. திறந்தலையாயுள்ள வேலை செய்யும் இடங்களிலே, (கற்பாறை முதலியவைகளைப்) பிளக்கும் வேலை ஆரம்பிப்பதற்கு முன்பும் அது முடிந்தவுடனும் ஒரு திறமையான ஏற்பாட்டின் பிரகாரம் அமைக்கப்பட்ட ஸிக்னல்கள் (குறிகள்) மூலமாக கிரமமானபடி எச்சரிக்கை செய்யவேண்டும். [ரெகுலேஷன் 79 (2).]

54. யாதொரு வேலை செய்யும் இடத்தில் மருந்துவைத்து தீபிடிக்கத் தவறிப்போனால், மின்சார உதவியினால் வெடி தீர்க்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி பிளக்கும் வேலை நடந்த பிறகு 30 நிமிஷ நேரம் வரையில் அந்த இடத்துக்குள் எவரும் மறுபடியும் பிரவேசிக்கக்கூடாது. மின்சார உதவியினால் வெடிதீர்க்கப்பட்டிருந்தால் 10 நிமிஷ நேரத்துக்குக் குறையாமல் இடைக்காலம் விடவேண்டும்.

[ரெகுலேஷன் 80.]

55. பூமியின்கீழுள்ள வேலை செய்யும் யாதொரு இடத்தில் வெடிதீர்த்தான பிறகு, வெடிதீர்த்த நபராவது சுரங்கத்தின் மானேஜரால் எழுத்துமூலமாய் நியமிக்கப்பட்டிருக்கும் தகுந்த யாதொரு நபராவது - வேறே எந்த நபராகிலும் அந்த இடத்துக்குள் பிரவேசிப்பதற்குமுன், ஜாக்கிரதையாய்ப் பரிசோதனைசெய்து, தமமுடைய அஸிஸ்டன்டுகளைக்கொண்டு அந்த இடத்தை அபாயம் நேரிடுவதற்கு ஏதுவாயில்லாதபடி செய்யவேண்டும். அந்தப்படி பரிசோதனை செய்து பிரஸ்தாப இடம் சகல விஷயங்களிலும் அபாயமற்றதென்று உறுதிகூறப்பட்டாகிறவரையில், அந்த இடத்துக்குள் வேறே எந்த நபரும் பிரவேசிக்கக்கூடாது.

[ரெகுலேஷன் 81.]

56. யாதொரு துவாரத்தில் ஒரு முறை மருந்திட்டிருந்தால், வெடிக்கத்தக்க வஸ்துக்களைத் தோண்டி எடுக்கக்கூடாது. மேலும், கெட்டிக்கப்பட்ட மருந்து தீபிடிக்கத் தவறிப்போயிருக்கும் யாதொரு துவாரத்துக்கு 12 அங்குலத்துக்குக் குறைந்த தூரத்தில் துவாரம் எதையும் குடையக்கூடாது.

[ரெகுலேஷன்கள் 82, 84.]

57. மருந்து வைத்து தீ பிடிக்கத் தவறிப்போனால், கட்டளை செய்திருக்கும் மண் முதலியவைகளில் ஒரு பாகத்தை அழுத்தப்பட்ட காற்றைக்கொண்டாவது அழுத்தத்துக்கு உட்பட்டிருக்கும் தண்ணீரைக் கொண்டாவது வெளியே எடுத்துவிடலாம். ஆனால், இது காரியத்துக்காக எவ்விதமான கருவியையும் உபயோகிக்கக்கூடாது. அதன்பிறகு அந்த துவாரத்தில் மறுபடியும் மருந்திட்டு வெடிதீர்க்கவேண்டும். [ரெகுலேஷன் 83.]

58. மருந்து வைத்து தீ பிடிக்கத் தவறிப்போன இடத்தைச் சிறிது காலத்துக்குக் காலிசெய்யும்பட்சத்தில், அக்கம்பக்கத்திலுள்ள சகல நபர்களுக்கும் அதைப்பற்றி எச்சரிக்கை செய்வதற்காக ஒரு ஆளை அங்கே வைக்கவேண்டும்; அலலது, அந்த இடத்துக்கு எவரும் போகக்கூடாதபடி அதற்கு அடைப்பு ஏற்படுத்தவேண்டும். திறந்தலையாயுள்ள வேலை செய்யும் இடங்களில், மருந்து வைத்து தீ பிடிக்கத் தவறிப்போன இடத்தைச் சிவப்பு கொடியைக் கொணடு குறிப்பிடுவது போதுமானதாகும்.

[ரெகுலேஷன் 85.]

வேலையாள்கள்.

59. ஆள்களைக் கீழே இறக்கவோ உயரத் தூக்கவோ உபயோகிக்கப்படும் யாதொரு கூடு, ஸ்கிப் என்னும் இரும்புதொட்டி, டப் என்னும் தொட்டி அல்லது பக்கெட் என்னும் சால் இயக்கப்பட்டபின்பு அதில் எவரும் ஏறவும் கூடாது, அதிலிருந்து எவரும் இறங்கவுங் கூடாது; அது எந்த இடத்தில் நிற்கவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறதோ அந்த இடத்துக்கு வந்து சேருகிறவரையில் அதை விட்டு எவரும் போகவுங்கூடாது. மேலும், ஷாப்டில் வேலை செய்துகொண்டிருக்கும்போது தவிர மற்ற சமயங்களில் எந்த நபரும் மேலே கண்ட யாதொரு கூடு, இரும்புதொட்டி, சால் அல்லது பெட்டியின் உச்சியிலாவது ஓரத்திலாவது ஏறிச்செல்லக்கூடாது.

[ரெகுலேஷன் 25.]

60. ஒவ்வொரு நபரும் - யாதொரு ஷாபடின் உச்சியிலாவது அதற்குச் சமீபத்திலாவது அதன் அடியிலாவது அதற்குச் சமீபத்திலாவதிருக்கும்போது ஷாப்டிலிருக்கும் ஆள்களுடைய உத்தரவுகளுக்கும் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளவேண்டும்.

[ரெகுலேஷன் 28.]

61. வாகன்க்ள் கையினால் இயக்கப்படும் பட்சத்தில், எந்த நபரும் யாதொரு வாகனை அடக்க முடியாமல் அது போகும் வழியிலேயே போகவிடக்கூடாது. [ரெகுலேஷன் 36.]

62. மானேஜரின் அனுமதியில்லாமல் எந்த நபரும் - பூமியின் கீழாவது பூமியின் மேலாவது யாதொரு டப் என்னும் தொட்டியிலாகிலும் ட்ரக்கிலாகிலும் வாகனிலாகிலும் ஏறிச்செல்லக்கூடாது. [ரெகுலேஷன் 37.]

63. பூமியின் கீழ் நிலையான விளக்குகள் போடப்பட்டிராத இடங்களில் ஒவ்வொரு நபரும் ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு போகவேண்டும். [ரெகுலேஷன் 52.]

64. எந்த நபரும் - எந்த இடத்தில் வேலை செய்யும்படி தமக்கு உத்தரவு செய்யப்பட்டிருக்கிறதோ அந்த இடத்தில் தவிர வேறே எங்கேயும் வேலை செய்யக்கூடாது.

[ரெகுலேஷன் 53.]

65. ஸ்டோப் என்னும் தோண்டப்பட்ட தரைக்குப் போகும் ஏணி வழியின்மேல் தவிர மற்றப்படி, செங்குத்தாகவாவது செங்குத்

தான சாய்வுடையதாகவாவதுள்ள யாதொரு ஷாப்டிலாகிலும் வின்ஸ் என்னும் சிறிய ஷாப்டிலாகிலும் இருக்கிற யாதொரு ஏணி வழியின் மேல் யாதொரு துளேபோடும் கருவியையோ வேறே கருவியையோ கட்டப்பட்டிராத எவையேனும் சாமான்களேயோ எந்த நபரும் கொண்டுபோகக்கூடாது. [ரெகுலேஷன் 61.]

66. (கற்பாறைகளேப்) பிளந்தான பிறகு நின்றிருக்கும் காலியாயுள்ள துவாரங்களேயாவது பள்ளங்களேயாவது எவரும் ஆழப்படுத்தவுங் கூடாது அவைகளின் ஜோலிக்குப் போகவுங் கூடாது. [ரெகுலேஷன் 82.]

67. ஒவ்வொரு நபரும் - மானேஜர் பிறப்பிக்கும் சட்டசம்மதமான சகல உத்தரவுகளின்படியும் கண்டிதமாய் நடந்துகொள்ளவேண்டும். [ரெகுலேஷன் 89.]

68. எந்த நபரும்-சுரங்கத்திலே வேலே செய்யும் இடத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அல்லது உபயோகிக்கப்படும் எந்த வஸ்துவையும் சேதப்படுத்தவுங்கூடாது, அழித்துவிடவுங்கூடாது, அக்கிரமமாய் அதன் ஜோலிக்குப் போகவுங்கூடாது. [ரெகுலேஷன் 92.]

69. எந்த நபரும் - யாதொரு அடைப்பை அப்புறப்படுத்தவோ அதன் வழியாய்ப் போகவோ யாதொரு அபாய ஸிக்னலே அப்புறப்படுத்தவோ அதைத் தாண்டிப்போகவோ பிரத்தியேகமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்றிருந்தாலொழிய, அந்தப்படி அப்புறப்படுத்தவுங்கூடாது போகவுங்கூடாது. [ரெகுலேஷன் 93.]

பலவகைப்பட்டவை.

70. ப்ளே வீல் (fly wheel) என்னும் ஒவ்வொரு சுழல் சக்கரத்துக்கும் யந்திரங்களின் திறந்தலேயாயும் அபாயகரமாயுமுள்ள சகல பாகங்களுக்கும் அடைப்பு ஏற்படுத்தி பந்தோபஸ்து செய்துவைக்கவேண்டும். [ரெகுலேஷன் 86.]

71. அபாயம் விளேக்கக்கூடியவையாயுள்ள எவையேனும் யந்திரங்களின் பாகங்களுக்கும் எவையேனும் மின்சார கண்டக்டர்களுக்கும் திறமையாய் வேலே செய்யும் கார்ட் (guard) என்னும் பாதுகாப்புச் சாதனங்கள் ஏற்படுத்தவேண்டும். [ரெகுலேஷன் 87.]

72. எந்த யந்திரங்களிலாவது (கருவிகள் அல்லது உபகரணங்களிலாவது) யாதொரு குறை அல்லது அபாயகரமான தோஷம் இருந்தால், அதைப்பற்றி அந்த யந்திரங்கள், கருவிகள் அல்லது உபகரணங்களின் விசாரணே வகிக்கும் நபர் - உடனே மானேஜருக்காகிலும் அண்டர்-மானேஜருக்காகிலும் என்ஜின்-ரைட் என்னும் என்ஜின் வேலே செய்பவருக்காகிலும் தெரிவிக்கவேண்டும். [ரெகுலேஷன் 88.]

(நிலக்கரிச் சுரங்கங்களல்லாத வேறே சுரங்கங்களுக்குச் சம்பந்தப்பட்ட) விதிகளின் சங்கிரகம்.

1. **சுகாதார சம்பந்தமாயும் தேகாரோக்கிய சம்பந்தமாயும் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனேகள்.**— ஒவ்வொரு சுரங்கத்திலும், வேலேயில் அமர்த்திக் கொள்ளப்பட்டவர்களுக்குக் குடிப்பதற்கேற்ற சுத்தமான தண்ணீர் இலவசமாய்க் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

தகுதியான கக்குஸையும் மூத்திரம் பெய்வதற்கான இடத்தையும் ஏற்பாடு செய்யவேண்டும்.

கக்குஸுகளுக்குச் சரியானபடி அடைப்பு ஏற்படுத்தவேண்டும். புருஷர்களுக்காக உத்தேசிக்கப்பட்ட கக்குஸுகளுக்கும் ஸ்திரீகளுக்காக உத்தேசிக்கப்பட்ட கக்குஸுகளுக்கும் போவதற்கு வெவ்வேறு வழிகள் இருக்கவேண்டும்.

கக்குஸுகளேச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். ஏனங்களேப் பிரதி தினமும் சுத்தஞ்செய்யவேண்டியதுமல்லாமல், அவைகளுக்கு வருஷத்தில் குறைந்தது ஒரு முறையாவது உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் தார் பூசவும்வேண்டும். [1 முதல் 5 வரையிலுள்ள விதிகள்.]

2. **பிரதம சிகிச்சை வேலே.**— வெடிக்கத்தக்க வஸ்துக்களே வழக்கமாய் உபயோகிக்கும் சகல சுரங்கங்களிலும் ஸ்ட்ரெட்சர்களேயும் (நோயாளிகளேத் தூக்கிக்கொண்டுபோவதற்கான சாதனங்களேயும்) ஸ்ப்ளின்டுகளேயும் (பத்தைகளேயும்) பாண்டேஜுகளேயும் (கட்டுசீலேகளேயும்) காயங்களுக்குப் போடுவதற்கான மருந்துகள் தைலங்கள் முதலியவைகளேயும் சித்தமாய் வைத்திருக்கவேண்டும். [விதி 8.]

3. **வேலேயாள்களே ரெஜிஸ்டர் செய்வது.**—சுரங்கத்தில் வேலேசெய்யும் சகல நபர்களேயும் குறித்து இதனுடன் சேர்த்திருக்கும் நமூனப்படி ஒரு ரெஜிஸ்டர் வைத்துவரவேண்டும்:

நமூனு

வேலே செய்யும் நபர்களேக் குறித்த ரெஜிஸ்டர்

(1923-ம் வருஷத்திய இந்துதேசத்துச சுரங்க ஆக்ட் 28-வது பிரிவு).

சுரங்கத்தின் பெயர்

சொந்தக்காரரின் பெயர்

19 ம்-வருஷம் மீ உ முதல் ஆரம்பமாகிற வாரம்.

பெயர்.	தகப்பனுரின் பெயர்.	ஜாதி.	ஆண் அல்லது பெண் என்பது.	உத்தியோகத்தின் தன்மை.	வேலே செய்யும் மணி நேரங்கள்.		வேலே செய்யும் தினங்கள்.	
					ஆரம்பிக்கும் காலம்.	முடியும் காலம்.	ஒவ்வொரு தினக்கிழமையும் இக்கிரமப்படியே செய்யப்படுமென்பது.	ஓய்வு தினங்கள்.

[விதி 9.]

4. **பாதுகாப்பு சம்பந்தமான நிபந்தனேகள்.**— அபாயகரமாயுள்ள சகல கீழறைகள் முதலியவைகளினுல் தீங்கு எதுவும் விளேயாதபடி செய்யவேண்டும் அல்லது அவைகளுக்குச் சரியாய் அடைப்பு ஏற்படுத்தவேண்டும். மேலும், 10 அடிக்கு மேற்பட்ட ஆழமாயுள்ள அல்லது பொதுவான ஒரு ரஸ்தாவிலிருந்தோ குடியிருக்

கும் வீட்டிலிருந்தோ, கவர்ன்மெண்டை, பிரதேச அதிகார சபையை அல்லது ரெயில்வே கம்பெனியைச் சேர்ந்த சொத்திலிருந்தோ மனிதர்கள் வாசஞ்செய்யும் யாதொரு கிராமத்திலிருந்தோ 50 அடி தூரத்துக்குள்ளிருக்கும் சகல கீழறைகளின் விஷயத்திலும் மேலேகண்டபடியே செய்யவேண்டும். [விதிகள் 12–13.]

வேலை செய்யாமல் விட்டுவிட்ட சுரங்கங்களுக்கு அடைப்பு எற்படுத்தவேண்டும். மனிதர்கள் வாசஞ்செய்யும் யாதொரு கிராமம் அல்லது வேறே கட்டிடம் முதலியவைகளிலிருந்து 50 கஜ தூரத்துக்குள் இருக்கும் யாதொரு ஸ்தானத்திலாவது அதற்குச் சமீபத்திலாவது சுரங்க வேலைகளை வியாபிக்கும்படிச் செய்வதற்குமுன் அல்லது ஆரம்பிப்பதற்குமுன் 60 தினம் முன்னதாக அது விஷயத்தைக் குறித்து டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கும் பிரதான இன்ஸ்பெக்டருக்கும் நோடிஸ் கொடுக்கவேண்டும்.

[விதிகள் 15–16.]

5. **பலவகைப்பட்டவை.**—மானேஜரின் சம்மதியில்லாமல் யாதொரு சுரங்கத்திலாவது அதற்குச் சமீபத்திலாவது லாகிரி உண்டாக்கும் யாதொரு பானத்தையாகிலும் வஸ்துவையாகிலும் எவரும் உட்கொள்ளக்கூடாது. மேலும், போதையாயிருக்கும் எந்த நபரும் யாதொரு சுரங்கத்தில் பிரவேசிக்கவுங்கூடாது அப்படிப்பட்ட நபரைச் சுரங்கத்திலாவது சுரங்கத்துக்குச் சமீபத்திலாவது இருக்கவிடவுங்கூடாது.

[விதி 20.]

ஷை ஆக்ட் 33-வது பிரிவின்படி அவசியமாயிருக்கிற ஆக்டின் நிர்ணயிக்கப்பட்ட சங்கிரகத்தையும் ரெகுலேஷன்கள் விதிகள் ஆகிய இவைகளின் நிர்ணயிக்கப்பட்ட சங்கிரகத்தையும் ஒவ்வொரு சுரங்கத்திலுமாவது அதற்குச் சமீபத்திலுமாவது ஒட்டவேண்டும். [விதி 20-A.]

ரெகுலேஷன்கள், விதிகள், சகாயச்சட்டங்கள் ஆகிய இவைகளின்படி வைத்திருக்கவேண்டிய சகல நக்ஷாக்கள், புஸ்தகங்கள், தஸ்தவேஜுகள் முதலியவைகளைச் சுரங்கத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு ஆபிஸில் வைத்திருக்கவேண்டும். [விதி 21.]

சகல ரிபோர்ட்டுகள் முதலியவைகளின் அசல் பிரதிகளையாவது அவைகளுக்குச் சரியான நகல்களையாவது அந்த ரிபோர்ட்டுகள் முதலியவை செய்யப்பட்ட பிறகு பன்னிரண்டு மாதகாலம் வரையில் சுரங்கத்தில் வைத்திருக்கவேண்டும். [விதி 22.]

எந்த நபரும் சுரங்கத்தில் ஒட்டியிருக்கும் சுரங்க ஆக்டின் யாதொரு சங்கிரகத்தையாவது, விதிகள் - ரெகுலேஷன்கள், சகாயச்சட்டங்கள் ஆகிய இவைகளின் யாதொரு சங்கிரகத்தையாவது யாதொரு நோடிஸையாவது எடுத்தெறியவுங்கூடாது கெடுக்கவுங்கூடாது விகாரப்படுத்தவுங்கூடாது. [விதி 23.]

எ. மக்ஜி. ஷி. டம்போ,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.